# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR

## O.S. No. 193/2018

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 06.07.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : ஜெயவேல் Father Name : பழனிமுத்து

Village : சாத்தப்பாடி Taluk : ஆத்தூர்

Calling : Age : 72

துவக்க நேரம் : 06.06 P.M.

**வாதிகள் தரப்பில் முதல் விசாரணை :** நான் இவ்வழக்கில் 1-ஆம் வாதி. வாதிகள் தரப்பு 1-ம் சாட்சி. எனது தரப்பில் சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். இதில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியும். நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கீழ்க்கண்ட ஆவணங்களை எனது தரப்பில் குறியீடு செய்து கொள்ள கேட்டுக் கொள்கிறேன்.

| வ.எண். | ஆவணம் | வகைப்பாடு | தன்மை |
|---|---|---|---|
| 1 | கடந்த 20.04.1967 தேதியிட்ட பாகப்பத்திரம் | அசல் | வா.த.சா.ஆ.1 |
| 2 | கடந்த 24.02.2016 தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் பத்திரம் | சார் பதிவாளர் நகல் | வா.த.சா.ஆ.2 |
| 3 | கடந்த 11.07.2016 தேதியிட்ட சதீஷ் கிரைய பத்திரம் ஆவண எண்.1462/2016 | அசல் | வா.த.சா.ஆ.3 |
| 4 | கடந்த 20.03.2011 தேதியிட்ட மாதிரி வரைபடம் | அசல் | வா.த.சா.ஆ.4 |
| 5 | கடந்த 20.03.2011 தேதியிட்ட சரவணன் கிரைய பத்திரம் ஆவண எண்.699/2011 | சார் பதிவாளர் நகல் | வா.த.சா.ஆ.5 |

| | | | |
|---|---|---|---|
| 6 | கடந்த 10.02.2016 தேதியிட்ட சக்திவேல் கிரைய பத்திரம் ஆவண எண் 263/2016 | சார் பதிவாளர் நகல் | வா.த.சா.ஆ.6 |
| 7 | கடந்த 26.12.2024 தேதியிட்ட வீட்டுவரி ரசீது | அசல் | வா.த.சா.ஆ.7 |
| 8 | கடந்த 20.05.2016 தேதியிட்ட வீட்டு வரி ரசீது | அசல் | வா.த.சா.ஆ.8 |

**<u>1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. சாத்தப்பாடி மெயின் ரோடிலிருந்து வடக்கு நோக்கி செல்லும் தாவா சந்திற்கு மேற்கு புறத்தில் எனக்கும், எனது மகனுக்கும் வீடும், காலி இடமும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சந்தின் கிழக்கு புறத்தில் 1-ஆம் பிரதிவாதி சக்திவேல் கிரயம் பெற்ற காலி இடம் உள்ளது என்றால் சரிதான். தாவா சந்திற்கு அருகில் தனது இடம் இருந்ததால்தான் 1-ஆம் பிரதிவாதி இவ்வழக்கில் தனது ஆட்சேபனையை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.

2. தற்பொழுது எங்களுக்கும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் இடையே சமரசம் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சந்தின் அளவு வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பொழுது ஒழுங்கற்ற நிலையில் இருந்தது என்றால் சரிதான். எங்களுக்குள் ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் மேற்படி தாவா சந்தின் மேற்குபுறம் கூரைவாரி உட்பட கிழமேல் அகலம் 8 அடியாக அமைத்து சரி செய்து கொண்டோம் என்றால் சரிதான். எங்களுக்குள் ஏற்பட்ட சமரசத்தின் அடிப்படையில் பிரதிவாதிகள் ரூ.3,25,000/- பெற்றுக் கொண்டு தாவா 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களில் தங்களுக்குண்டான உரிமையை விட்டுக் கொடுத்து உள்ளார்கள் என்றால் சரிதான்.

3. தற்பொழுது தாக்கல் செய்யப்பட்டுள்ள சமரசத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட தாவா சந்தின் மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மாதிரி வரைபடம் **<u>பி.வா.சா.ஆ-1</u>** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 06.12 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Tmt.L.Kalaiselvi - O.S. No.193/2018, Dt.06.07.2026.